விலை ரூபா: 10.00

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: நான்கு

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2038 சித்திரை 10 திங்கட்கிழமை (23.04.2007) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 125

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் ...லையிலிருந்து தயாரிக்கப்பட்டது.
ராம்கோ சீமெந்து

## ஐ.நா.உதவி அமைப்பை வெளியேறுமாறு இலங்கை அரசாங்கம் அறிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபையின் மனிதாபிமான உதவி அமைப்புக்களின் இணைப்பு அமைப்பை இலங்கையின் அரசியல் நெருக்கடிகள் உருவாகியுள்ள தமிழர் பகுதிகளான வடக்கு-கிழக்கு மாகாணங்களை விட்டு வெளியேறுமாறு அரசாங்கம் உத்தரவிட்டுள்ளது.

இது தொடர்பாக கொழும்பில் உள்ள ஐக்கிய நாடுகள் சபையின் அலுவலகத்திற்கு அனுப்பப்பட்ட கடிதத்தில் இந்த அமைப்பு அதன் தேவைக்குரிய காலப்பகுதியை விட அதிக காலம் தங்கியிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அமைப்பானது ஆழிப்பேரலை நிவாரண உதவிகளை வழங்குவதற்காக இலங்கைக்கு வந்திருந்தது. எனினும் வேறு பல தேவைக (04 ஆம் பக்கம் பார்க்க)

## இனப் பிரச்சினைக்கான சிறி.சு.கட்சியின் யோசனை அடுத்த வாரம் முன்வைக்கப்படும்

(கொழும்பு)

இலங்கையின் தேசிய பிரச்சினைக்கு தீர்வுகாண்பது தொடர்பாக சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் யோசனைகள் அடுத்தவாரம் சர்வகட்சிக் குழுவிடம் சமர்ப்பிக்கப்படுமென கட்சியின் செயலாளர் அமைச்சர் மைத்திரி பால சிறிசேன தெரிவித்துள்ளார்.

அதிகாரத்தை பரவலாக்குவதன் மூலம் பிரச்சினைக்கு தீர்வுகாண முடியுமெனவும் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் நிலைப்பாட்டில் மாற்றம் இல்லையெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (04 ஆம் பக்கம் பார்க்க)

# எதிர்வரும் தினங்களில் வடக்கில் தாக்குதல்

## பிரதமர் ரட்ணசிறி அறிவிப்பு



(கொழும்பு)

எதிர்வரும் தினங்களில் வடக்கிலுள்ள விடுதலைப்புலிகளின் முகாம்கள் மீதான தாக்குதல்கள் ஆரம்பிக்கப்படுமென பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க அறிவித்துள்ளார். (04 ஆம் பக்கம் பார்க்க)

## விடுதலைப்புலிகளின் விமானங்கள் யுத்தப் பயிற்சியில் ஈடுபட்டுள்ளன

### பாதுகாப்பு ஆய்வாளர் இக்பால் அத்தாஸ்

விடுதலைப்புலிகளின் யுத்த விமானங்கள் போர்ப் பயிற்சியில் மிக வேகமாக ஈடுபட்டு வருகின்றன. இதற்காக விடுதலைப்புலிகளின் விமானங்கள் வன்னிப் பிராந்தியத்தில் பறப்பு நடவடிக்கையில் ஈடுபட்டு வருவதாக பாதுகாப்பு ஆய்வாளர் இக்பால் அத்தாஸ் தெரிவித்துள்ளார்.

சண்டே ரைம்ஸ் வாரப்பத்திரிகையில் அவர் எழுதிய கட்டுரையின் தொகுப்பு இரண்டாம் பக்கத்தில்...

## காணாமல் போனோர் பற்றி விளக்கம் கேட்கிறது ஐ.நா.சபை

ஆட்கடத்தல் ,காணாமற்போதல் சம்பவங்கள் தொடர்பில் துரித விசாரணைகளை நடத்துமாறு ஐக்கிய நாடுகள் சபை இலங்கை அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளதுடன் மூன்று மாத காலப்பகுதிக்குள் அது தொடர்பான விளக்க அறிக்கையைச் சமர்ப்பிக்குமாறும் பணித்துள்ளது.

நாட்டில் மனித உரிமை மீறல்கள் தொடர்ச்சியாக அதிகரித்து வரும் நிலையில், முடிபின்றித் தொடரும் ஆட்கடத்தல்கள் தொடர்பாகவும், அவை மக்கள் மத்தியில் ஏற்படுத்தியுள்ள பதற்றம் தொடர்பாகவும் காணாமற்போனோரைத் தேடியறியும் குழு ஐக்கிய நாடுகள் சபைக்கு கடிதம் மூலம் அறிவித்திருந்ததோடு கடத்தப்பட்டு காணாமல் போனோரின் விபரங்களையும் அனுப்பியிருந்தது.

அதற்குப் பதிலளிக்கும் வகையிலேயே ஜெனீவாவில் உள்ள ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகளுக்கான உயர் ஸ்தானிகராலயம் அரசாங்கத்திடம் இக்கோரிக்கையை விடுத்துள்ளது.

காணாமற்போனோரின் 45 பேரின் விபரங்கள் முதற்கட்டமாகவும் பின்னர் மேலும் 45 பேரின் (04 ஆம் பக்கம் பார்க்க)

## நோர்வேத் தூதுவர் இன்று வன்னி விஜயம்

இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் ஹான்பிறட்ஸ்கர் இன்று கிளிநொச்சிக்கு விஜயம் மேற்கொண்டு விடுதலைப்புலிகளை சந்திக்கவுள்ளார். கிளிநொச்சி செல்லும் அவர் விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழுவினரை சந்தித்து கலந்துரையாடவுள்ளனர்.

இதேவேளை கடந்த வாரம் அரச சமாதானக் குழுத் தலைவர் நிமால் சிறிபால டி சில்வாவையும் நோர்வேத் தூதுவர் சந்தித்துக் கலந்துரையாடியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ந-5)

## கடன் அட்டை விவகாரம் தமிழ்ச்செல்வன் மறுப்பு

(கிளிநொச்சி)

கடன் அட்டை முறைகேடுகள் நடைபெறுவதன் பின்னணியில் விடுதலைப்புலிகள் இருப்பதாக பிரித்தானியாவுக்கான இலங்கைத் தூதரகத்தின் முதல் நிலைச் செயலாளர் தெரிவித்த குற்றச்சாட்டை விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் நிராகரித்துள்ளார்.

இது தொடர்பில் தமிழ்நெட் இணையத் தளத்திற்கு அவர் அளித்த நேர்காணலில் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் அனைத்துலக சமூகத்தின் குற்றச்சாட்டுக்கள் உள்ளாகியிருக்கும் அரசாங்கமானது அதனைத் திசைதிருப்பும் வகையில் இத்தகைய குற்றச்சாட்டைக் கூறுகிறது.

இத்தகைய பொய்யான பரப்புரைச் (04 ஆம் பக்கம் பார்க்க)

## இறுதிச் சுற்றில் இலங்கை தெரிவானால் ஜனாதிபதி மேற்கிந்திய தீவுகளுக்குச் செல்வார்

(கொழும்பு)

மேற்கிந்திய தீவுகளில் நடைபெறும் துடுப்பாட்ட போட்டிகளில் இலங்கை அணி இறுதிச் சுற்றுக்கு தெரிவானால் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மேற்கிந்திய தீவுகளுக்குச் செல்லத் திட்டமிட்டுள்ளார்.

பார்படோஸ்ஸன் ஹெரன்சிங் ரன் ஓவல் மைதானத்தில் இறுதிச் சுற்றுப் போட்டி நடைபெற உள்ளது.

நாளை செவ்வாய்க்கிழமை நியூசிலாந்துக்கும் இலங்கைக்கும் இடையில் நடைபெறவுள்ள துடுப்பாட்டப் போட்டிகளின் முடிவுகளை பொறுத்து ஜனாதிபதி மேற்கிந்திய தீவுகளுக்கு பயணத்தை (04 ஆம் பக்கம் பார்க்க)

## கடற்புலிகளின் அச்சுறுத்தல் குறித்து அமெரிக்கா ஆராய்கிறது



### அமெ.கடற்படைத்தளபதி தெரிவிப்பு

(கொழும்பு)

இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் கடற்புலிகளின் அச்சுறுத்தலுக்கு எப்படி முகம்கொடுப்பது என்று ஆராய்ந்து வருவதாக அமெரிக்க கடற்படைத் தளபதி அட்மிறல் மைக்கல் ஜி முல்லான் தெரிவித்திருக்கிறார். இந்தியாவுக்கு மூன்று நாள் விஜயத்தை மேற்கொண்டிருந்த மைக்கல் ஜி முல்லான் புதுடில்லியில் நடத்திய ஊடகவியலாளர் மாநாட்டிலேயே இந்து சமுத்திர பிராந்தியத்தில் கடற்புலிகளின் அச்சுறுத்தல் குறித்து தெரிவித்திருந்தார்.

இந்து சமுத்திர பிராந்தியத்தில் கடற்புலிகள் அச்சுறுத்தல் கவலையளிக்கும் வகையில் அமைந்துள்ளதாக அந்த ஊடக வியலாளர் மாநாட்டில் தெரிவித்த அவர், கடற்புலிகளின் இத்தகைய அச்சுறுத்தல்களுக்கு முகம் கொடுப்பது குறித்து இந்தியாவுடன் இணைந்து (04 ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி மகிந்த நாடு திரும்பினார்

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இத்தாலிய விஜயத்தை முடித்துக்கொண்டு நேற்று காலை நாடுதிரும்பியுள்ளார். இத்தாலி உரோம் விஜயத்தில் தனது எதிர்பார்ப்புக்கள் அனைத்தும் வெற்றிகரமாக அமைந்ததாகவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

இத்தாலியிலுள்ள இலங்கையர்களின் பிரச்சினைகள் தொடர்பாக ஜனாதிபதி இவ் விஜயத்தின் போது இத்தாலிய ஜனாதிபதி மற்றும் பிரதமருடன் பேச்சுவார்த்தையை நடாத்தியுள்ளதாகவும் ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது.

இத்தாலிய (04 ஆம் பக்கம் பார்க்க)

# உலகக் கிண்ணக் கிரிக்கெட் 2007

# விறுவிறுப்பான ஆட்டத்தில் இங்கிலாந்து அணி வெற்றி

## கண்ணீருடன் விடைபெற்றார் லாரா



விறுவிறுப்பான ஆட்டத்தில் இங்கிலாந்து அணி மேற்கிந்தியத் தீவுகளை ஒரு விக்கெட்டால் வெற்றி பெற்றது.

மேற்கிந்தியத் தீவுகளில்நடைபெற்று வரும் உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரில் நேற்று முன்தினம் நடைபெற்ற இறுதி சூப்பர் 8 ஆட்டத்தில் மேற்கிந்தியத்தீவுகள் - இங்கிலாந்து அணிகள் மோதின.

இப்போட்டியல் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இங்கிலாந்து அணித்தலைவர் வோகன் முதலில் களத் தடுப்பைத் தெரிவு செய்தார்.

தொடரில் எதிர்பார்ப்புக்கள் அதிகம் இல்லாத போதும் பிரைன் லாராவின் இறுதிப் போட்டி என்பதனால் ரசிகர்கள் பெருமளவில் கலந்து கொண்டனர். இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி கிறிஸ் ஹைல் மற்றும் டேவின் ஸிமித்தின் சிறப்பான ஆட்டத்தினால் 49.5 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 300 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் கிறிஸ் ஹைல் 79 ஓட்டங்களையும் டேவின் ஸிமித் 61 ஓட்டங்களையும் சாமுவெல்ஸ் 51 ஓட்டங்களையும் பெற்றனர். தனது இறுதிப் போட்டியில் விளையாடிய பிரைன் லாரா 18 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது ரன் அவுட் ஆகிச் சென்றார்.

பந்து வீச்சில்இங்கிலாந்து அணி சார்பாக மைக்கல் வோகன் 3 விக்கெட்டுக்களையும் அன்றுபிளின்றொப் 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர். தொடர்ந்து 50 ஓவர்களில் 301 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி பீற்றர்சனின் சிறப்பான துடுப்பாட்டத்தினால் 49.5 ஓவர்களில் 9விக்கெட்டுக்களையிழந்து 301 ஓட்டங்களைப் பெற்று ஒரு விக்கெட்டால் வெற்றி பெற்றது.

இதில் ஹெவின் பீற்றர்சன் 100 ஓட்டங்களையும் மைக்கல் வோகன் 79 ஓட்டங்களையும் போல் நிக்ஷன் 38 ஓட்டங்களையும் பெற்றனர். இப்போட்டியுடன் சர்வதேச கிரிக்கெட் போட்டியிலிருந்து ஓய்வுபெறும் மேற் கிந்தியத் தீவுகள்அணித் தலைவர் பிரைன் லாரா கண்ணீர் மல்க சொந்த மண்ணில் ரசிகர்களிடமிருந்து விடை பெற்றார். இப்போட்டியின் ஆட்ட நாயகனாக இங்கிலாந்து அணியின் கெவின் பீற்றர்சன் தெரிவானார். (ந-5)


அனுசரணை:-

SRI LANKA LIFE
மினிமுத்து
குழந்தைகளுக்கான திட்டம்

Fitch Ratings எனப்படும் பிரபல சர்வதேச தரப்படுத்தல் அமைப்பிடமிருந்து காப்புறுதி நிதித் துறையில் AA-(sri) என்ற மிகவுயர்ந்த தரச் சிறப்பு அந்தஸ்தைப் பெற்றுக் கொண்ட இலங்கையின் முதலாவது மற்றும் ஒரேயொரு காப்புறுதி நிறுவனம் ஸ்ரீ லங்கா இன்ஷூவரன்ஸ் ஆகும்.


# இராமகிருஷ்ண மிஷன் சுவாமி சென்னைக்கு மாற்றம்



(கொழும்பு)

இராமகிருஷ்ண மிஷன் கொழும்புக் கிளையின் தலைவராகக் கடந்த 1991 ஆம் ஆண்டு முதல் 16 வருடங்களாக சேவைபுரிந்து வந்த சுவாமி ஆத்மகனானந்த மகராஜ் அவர்கள் சென்னை விவேகானந்தா கல்லூரியில் பதவியேற்கவுள்ளார். இதற்காக அவர் இன்று இந்தியா பயணமாகவுள்ளார்.

ஸ்ரீமத் ஆத்மகனானந்தா மகராஜ் அவர்கள் கோயம்புத்தூரில் உள்ள இராமகிருஷ்ண மிஷன் கலை விஞ்ஞானக் கல்லூரியில் இலிகிதர் பொறுப்பிலிருந்து மாற்றல் பெற்று கொழும்புக் கிளையைப் பொறுப்பேற்றார்.

சுவாமிகள் 16 வருட கால சேவையில் வடக்குக் கிழக்கு,மலையகம் உள்ளிட்ட நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கும் அளப்பரிய சேவைகளை வளர்ப்பதற்காகவும் இளைஞர்களின் சுயதிறன் விருத்திக்கும் பெரும் பாடுபட்டார்.

சுவாமிஜியின் இடமாற்றத்தினையடுத்து அவரது இடத்துக்கு சுவாமி சர்வரூபானந்தாஜி கொழும்புக் கிளையின் புதிய தலைவராகப் பொறுப்பேற்றுள்ளார். (ந-5)

# விலையை அதிகரிக்கும் செயலில் சங்கங்கள் ஈடுபடக் கூடாது

## யாழ்.அரச அதிபர் எடுத்துரைப்பு

ப.நோ. கூ. சங்கங்களால் ஆற்றப்படும் சேவைகளுக்கு ஒரு சில சங்கங்கள் விடும் பிழைகளினால் பங்கம் ஏற்பட்டு வருவதாக யாழ். அரச அதிபர் க.கணேஷ் தெரிவித்துள்ளார்.

எனவே சகல ப.நோ. கூ.சங்கங்களும் மக்களிற்கான சேவையினை மிக அவதானத்துடன் மேற்கொள்ளுமாறு அவர் அறிவுரை வழங்கியுள்ளார்.

யாழ்.மாவட்ட செயலகத்தில் நேற்று இடம்பெற்ற பிரதேச செயலாளர்கள் மற்றும் கூட்டுறவுச் சங்கங்களுக்கிடையிலான சந்திப்பின் போதே மேற்கண்டவாறு கருத்துக்களை யாழ்.அரச அதிபர் க.கணேஷ் குறிப்பிட்டுள்ளார்.

சகல பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களும் ஒரே விலையில் பொருள்கலள விற்பனை செய்ய வேண்டும். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கிடையே ஒரே பொருள் மாறுபட்ட விலையில் விற்பனை செய்யப்படுவதாகவும் இதனால் பொதுமக்கள் பாதிப்படைவதுடன் பல நோக்குக்கூட்டுறவுச் சங்கங்கள் மீது வெறுப்படைந்து விடுவார்கள். எனவே பொருள்களின் விலையைக் குறைவாக விற்றாலும் விலை அதிகரிப்பை ஏற்படுத்தாதீர்கள் எனக் குறிப்பிட்டுள்ள யாழ். அரச அதிபர் ,பொருள்களின் விலையை நிர்ணயித்து அதனடிப்படையில் விற்பனை செய்யுமாறும் கூறினார். இதற்குப் பதிலளித்த பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினர்,அரச அதிபர் நிர்ணயம் செய்யும் விலையைத் தாம் ஏற்றுப் பொருள்களை விற்பனை செய்வதாக உறுதியளித்துள்ளனர். (ந-5)

# விடுதலைப்புலிகளின் விமானங்கள்...

தமிழீழ விடுதலைப்புலிகளின் வானூர்திகள் எண்ணிக்கை தெரியாத பறப்புக்களில் வன்னியில் ஈடுபட்டுள்ளது என்றும் அவர்களின் வானூர்திகளில் ஒன்று மணலாற்றுப் பகுதியில் உள்ள பதவியாவில் அவதானிக்கப்பட்டுள்ளது என்றும் கொழும்பிலிருந்து வெளிவரும் வார ஏடு தெரிவித்துள்ளது.

சண்டே ரைம்ஸ் வார ஏட்டின் பாதுகாப்புத் துறை ஆய்வாளரான இக்பால் அத்தாஸ் தனது பத்தியில் இதனைக் குறிப்பிட்டுள்ளார். அந்தப் பத்தியிலிருந்து சில முக்கிய பகுதிகள்,

வன்னியில் பறப்புக்களில் ஈடுபட்டுள்ள விடுதலைப்புலிகளின் வானூர்திகள் ஒரு சமய்த்தில் வானிலிருந்து தரைக்கு சூடுகளையும் வழங்கி பயிற்சிகளில் ஈடுபட்டதாக அரச புலனாய்வுத்துறையினர் தெரிவித்துள்ளனர். எனினும் அதனைச் சுயாதீனமாக உறுதிப்படுத்த முடியவில்லை.

மேலும் கிழக்கில் அரசாங்கம் கூறுவது போல் படையினரின் முழுக் கட்டுப்பாட்டில் அந்தப் பகுதி இல்லை. சில பகுதிகளில் உள்ள விடுதலைப்புலிகள் மிக அதிகளவான சேதங்களை விளைவித்து வருகின்றனர்.

பல இடங்களில் தற்போதும் எதிர்ப்புக்கள் உள்ளன. குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டத்தில்தான் இது அதிகமாகவுள்ளது. களத்தின் உண்மையான நிலைவரம் அரசாங்கத்தின் தீவிரமான பிரசாரங்களினால் மறைக்கப்படுகின்றன.

விடுதலைப்புலிகளின் நோக்கம் தெளிவானவை. அவர்கள் ஒரு இடத்திலிருந்து மற்றைய இடத்திற்குத் தமது படைகளை செறிவாக்கி வருகின்றனர். இது அரசாங்கப் படையினரின் பலத்தை பரவலடைய வைப்பதற்கு அவர்களுக்குப் போதுமானதாகவுள்ளது.

வட போர் முனையைப் பொறுத்தவரையிலும் இருதரப்பும் தமது நகர்த்தல்களைச் செய்து வருகின்றன. புது வருடத்திற்கு முன்னைய நாள்களில் மடுத் தேவாலயத்திற்கு வடக்காக நகர்ந்த அரசாங்கப் படையினர் தாக்குதலுக்குள்ளாகியுள்ளனர்.

இந்தத் தாக்குதலில் இராணுவத்தின் உயர்பயிற்சிகளைப்பெற்ற அணி ஒன்று சிக்கிப் பலியாகியுள்ளது. கொல்லப்பட்ட ஏழு படையினரின் சடலங்களை விடுதலைப்புலிகள் கையளித்துள்ளனர். ஆனால் அரசாங்கம் தனது மிக உயர்ந்த பயிற்சி பெற்ற எட்டுப் படையினர் காணாமல் போனதாகக் கூறியதுடன் அவர்கள் கைது செய்யப்பட்டிருக்கலாம் என அச்சத்தையும் வெளியிட்டிருந்தது.

மோதல்களில் காயப்படும் தமது உறுப்பினர்களின் தேவைக்காக விடுதலைப்புலிகள் குருதி சேகரிக்கும் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர். அவர்கள் பாதுகாப்புப் படையினரின் பாதுகாப்பு முன்னரங்களுக்கு அண்மையாகப் பல இடங்களில் உயர் அலைவரிசை கொண்ட தொடர்பு சாதனங்களையும் நிறுவி வருகின்றனர்.

முல்லைத்தீவுக் கடற்பகுதிகளிலும் வடக்கு-கிழக்குக் கரையோரப் பகுதிகளிலும் குறிப்பாக நாகர் கோவில், வெற்றிலைக்கேணி, கண்டல்காடு, சாலை கடற்பகுதிகளில் விடுதலைப்புலிகள் தமது கடற்புலிகளின் பலத்தை அதிகரித்து வருகின்றனர்.

இதன் தொடர்ச்சியாக திருகோணமலைத் துறைமுகத்தில்தரித்து நின்ற சரக்குக் கப்பல் ஒன்றை விடுதலைப்புலிகள் தாக்க முயன்றுள்ளனர். இந்தக் கப்பல் தனியாருக்குச் சொந்தமான சீமெந்துக் கூட்டுஸ்தாபனத்திற்கு அருகில் தரித்து நின்றது. இது அதிகாரிகளிடம் பலத்த அச்சத்தை உண்டுபண்ணியுள்ளது.

ஆனால் தாக்குதல் வெற்றி பெற்றிருந்தால் அதனால் எத்தகைய விளைவுகள் ஏற்பட்டிருக்கும் என்பதைக் கணிக்க முடியாது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுவும் விடுதலைப்புலிகளால் கட்டுநாயக்கா வான்படைத் தளத்தின் மீது நடத்தப்பட்ட தாக்குதலைத் தொடர்ந்து ஏற்பட்ட அரசியல், இராணுவ, [illegible] பொருளாதார சேதங்களைப் [illegible] இருந்திருக்கும்.

2002 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதத்தில் இருந்து ஒக்டோபர் மாதம் வரையிலும் நிலைமைகளை ஆராய்ந்த அமெரிக்காவின் பசுபிக் பிராந்தியக் கட்டளைப்பீடம் இலங்கை அரசாங்கத்தை இரவுப் பார்வைச் சாதனங்களை வாங்கும் படி பணித்திருந்தது.

முதலில் உலங்கு வானூர்திகளுக்கும் பின்னர் சரக்கு வானூர்திகளுக்கும் இறுதியாகத் தாக்குதல் வானூர்திகளுக்கும் அதனை உபயோகிக்கும்படி அது ஆலோசனை வழங்கியிருந்தது. அதற்கான பயிற்சிகளுக்கும் அதிகாரிகள் பரிந்துரை செய்திருந்தனர்.

விடுதலைப்புலிகள் வசம் உள்ள வானூர்தி எதிர்ப்பு ஏவுகணைகளின் தாக்கு திறன் குறையும் வரையில் இரவு நேர வான் பறப்புக்களையே அதிகளவில் மேற்கொள்ளும்படி வான்படையைக் கேட்டிருந்தது.

விடுதலைப்புலிகளின் ஏவுகணைத் தாக்குதல் திறன்தற்போதும் முனைப்பாகவுள்ளது. எனவே பகல் நேரத்திலான வானூர்திப் பறப்புக்கள் மிகவும் ஆபத்தானவை. வெற்றிகரமான தாக்குதல்களை நடாத்த வேண்டும் என்றால் வான்படையினர் இரவுத் தாக்குதல்கலை நடத்த வேண்டும்.

தற்போது இலங்கையின் வான்படையினரிடம் உள்ள எம்.ஐ.-24 ரக தாக்குதல் உலங்கு வானூர்திகளில் சில முன்னணிப் பார்வையுள்ள ஊதாத் தொகுதியை (Forward Looking in frared (FLIR) System) கொண்டுள்ளன. இந்த சாதனம் மிகவும் பெறுமதியானது என தான் எண்ணுவதாக ஒரு எம்.ஐ-24 ரக உலங்கு வானூர்தியின் வானோடி ஒருவர் தெரிவித்துள்ளார்.

சில வான்படை வானோடிகள் பழைய இரவுப் பார்வைச் சாதனத்துடன் பறப்புக்களில் ஈடுபடுகின்றனர்.அவர்கள் அதற்கான முறையான பயிற்சிகளும் அற்றவர்கள். ஏவு கணைத் தாக்குதல்களுக்கு அப்பால் வானோடிகளுக்கு இரவுத் தாக்குதல் பயிற்சிகள் அதிகளவில் தேவைப்படுகின்றன.

ஏனெனில் அப்படியான பயிற்சிகள் இருந்திருந்தால் விடுதலைப் புலிகளால் மார்ச் 26 ஆம் திகதி கட்டுநாயக்கா வான்படைத்தளத்தின் மீது நடத்தப்பட்ட தாக்குதலை தாக்குதலுக்கு முன்னர் தடுத்திருக்க முடியும். அல்லது பின்னர் அவர்களுக்கு இழப்புக்களை ஏற்படுத்தியிருக்க முடியும்.

விடுதலைப்புலிகளின் கட்டுநாயக்கா வான்படைத் தளத்தின் மீதான தாக்குதலையடுத்து வான் பாதுகாப்பிற்கான பல எதிர்ப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவை பாதுகாப்புச்செலவை மேலும் அதிகரிக்கச் செய்துள்ளன.

எனினும் பாதுகாப்பு நடைமுறைகள் காரணமாக அவற்றை வெளியிட முடியாது. இந்தக் கொள்வனவுகளில் நடைபெறும் ஊழல்களையும் வெளியிட முடியாது. அவை உயர் ரகப் பாதுகாப்பு ரகசியங்களாகப் பேணப்படுகின்றன.

பேச்சுக்கள் தொடர்பான ஊகங்கள் எழுகின்ற போதிலும் களத்தின் தயாரிப்பு வேலைகள் ஒரு தெளிவான கருத்தைச் சொல்கின்றன. அதாவது எதிர்வரும் வாரங்களில் அதிகளவான மோதல்களை எதிர்பார்க்கலாம் என்பதுதான் என அந்தப் பத்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-5)


NEW YEAR SALE

(ஏப்ரல் மாத முடிவு வரை)




சண்டீவி, சன்நியூஸ்,ஜெயா டீவி, பொதிகை மற்றும் DD Sports, Headlines today, DD News உட்பட 44 சனல்களை DVD Quality உடன் கண்டு களிக்கக்கூடிய Ku band டிஸ் அன்ரனா சிஸ்டம் மற்றும் டிஸ் டீவி பக்கேஜ்கள், கேபிள் டீவி உபகரணங்கள் யாவும் விசேட விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

எமது நிறுவனம் இலங்கை தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் (TRC) அனுமதி பெற்ற நிறுவனம்.

விபரங்களுக்கு:- SATS-TECH ENGINEERS

இல.182, கே.கே.எஸ்.வீதி, கொக்குவில் (குளப்பிட்டி சேச் அருகில்)

Phone:- 021 222 5908 / 077 7710785

(C-022)



**தேவை**

Sharp SF-1118 போட்டோ பிரதி இயந்திரம் உடன் தேவை.

தொடர்பு:- காலை 9.00 மணி முதல் மாலை 3.00 மணி வரை. 021 222 9133
222 5821 (839)



**ஆனந்தி திருமண சேவை**

1985 இல் பிறந்த மூல நட்சத்திரம், கிரக பாவ சங்கியை 64 1/2,எடுப்பான தோற்றம், உயரம் 5' 5", A/L சித்தி, 6 இல் செவ்வாய் உடைய குகன் குல மணமகனுக்கு வெளிநாடுகளில் நிரந்தர குடியுரிமையுள்ள மணப்பெண்ணை நாடுகின்றோம். நேரடியாகஅல்லது அஞ்சல் மூலம் தொடர்பு கொள்ளலாம். ஆனந்தி திருமணசேவை, சோதிடர் V.A.சிவராஜா, 56, அம்மன் றோட், கந்தர்மடம், யாழ்ப்பாணம். மணமக்களைத் தேடித்தர உள்ளூர் மற்றும் வெளியூர்களில் தொடர்பு கொள்ளுங்கள். (843)

> தீமையை அனுபவித்தவனைக் காட்டிலும் நன்மையைப் பற்றி அதிகம் அறிந்தவன் வேறு எவனும் இல்லை.
>
> -அப்துர் ரஹீம்

# வலம்புரி

## சந்தேகத்தைத் தரும் சர்வதேச சமூகத்தின் அழுத்தம்

இலங்கையில் நிலவும் இனப்பிரச்சினைக்கு உடனடியாகத் தீர்வு காணுமாறு சர்வதேச நாடுகளும் சர்வதேச பொது அமைப்புகளும் இலங்கை அரசிடம் வலியுறுத்திக் கேட்டு வருகின்றன.

இதைவிட இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகள்; இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணத் தவறும் பட்சத்தில் உதவி வழங்குவது நிறுத்தப்படும் எனவும் எச்சரித்து வருகின்றன. இருந்தும் எதுவுமே பயனளிப்பதாகத் தெரியவில்லை.

சர்வதேச சமூகத்தின் அழுத்தம் இலங்கை அரசு மீது விதிக்கப்புடுகின்ற போதிலும் இனப்பிரச்சினை விடயத்தில் சமாதான பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காணும் எண்ணம் அரசுக்கு இருப்பதாகத் தெரியவில்லை.

அவ்வாறாயின் சர்வதேச சமூகத்தின் அழுத்தத்தில் எங்கோ தவறு நடக்கிறது என்ற முடிபுக்கு நாம் வரலாம்.

அதாவது இலங்கை அரசை எச்சரிக்கை செய்வது போலவும், இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணுமாறு வலியுறுத்துவது போலவும் காட்டிக் கொள்ளும் சில சர்வதேச நாடுகள் மறைமுகமாக இலங்கைக்கு ஊக்கம் அளிப்பது புலனாகின்றது.

இலங்கையில் போரை ஊக்குவிக்கும் வகையில் அந்நாடுகள் ஆயுதம் மற்றும் இராணுவப் பயிற்சி, ஆலோசனை என்பவற்றைத் தாராளமாக வழங்கி வருகின்றன.

இத்தகைய நிகழ்வுகள் நடைபெறுவதன் காரணமாகவே அரசு இனப்பிரச்சினைத் தீர்வில் சமாதான வழியைக் கைவிட்டு யுத்தத்தை முன்னெடுக்கின்றது.

இலங்கை போன்ற வறிய நாடுகளின் பொருளாதாரம் என்பது சர்வதேசத்தின் உதவிக் கரத்தில் தங்கியுள்ளது.

சர்வதேச சமூகத்தின் உதவியை ஓரங்கட்டிவிட்டு, இம்மியும் நகர முடியாதென்ற நிலையில் இருக்கும் இலங்கையில் சர்வதேச அழுத்தத்திற்கு எதிர்க்கணை தாராளமாக விடப்படுகின்றது.

இலங்கை போன்ற நாடுகளுக்கு உதவுவது உலக நாடுகளின் கடமை. அதற்காக அந்நாடுகள் நிபந்தனை எதனையும் விதிக்க முடியாது. இலங்கை விவகாரத்தில் எந்த நாடும் தலையிட அனுமதிக்க மாட்டோம் என்றவாறு நாட்டின் பிரதமர் உட்பட பேரினவாதிகள் உரக்கக் கத்துகின்றனர்.

ஓர் சிறிய - வறிய நாடான இலங்கை சர்வதேச சமூகத்தை தூக்கி எறியும் வகையிலும் சர்வதேச மன்னிப்புச் சபை போன்ற அதியுயர் மனித உரிமை பாதுகாப்பு அமைப்புக்களை அவமதிக்கும் வகையிலும் நடந்து கொள்கின்றதாயின், அதற்கான பின்னணி பலமாக இருக்கின்றது என்பதே பொருளாகும்.

எனவே இலங்கை இனவிவகாரத்தில் சர்வதேச சமூகத்தின் அழுத்தம் என்பது தெளிவானதாகவும் ஆணித்தரமானதாகவும் இருப்பது முதற்கண் அவசியமாகும்.

சமாதான வழியில் தீர்வைக் காணுங்கள் எனக் கூறிவிட்டு ஆயுதங்களை வழங்குவது சொல்லுக்கும் செயலுக்குமான வேறுபாடாகும். சொல்லும் செயலும் வேறுபடும்போது எதிர்பார்ப்பை அடைய முடியாது. இதுவே இலங்கை விவகாரத்தில் நடந்து வருகின்றது.

# இலங்கைக்கான நிதி உதவியை அமெரிக்கா முடக்கக் கூடாது

## ஜனாதிபதி மகிந்த, புஷ்ஷுக்குக் கடிதம்

(கொழும்பு)

இலங்கைக்கான மிலேனியம் சலஞ் கணக்கு நிதியை முடக்க வேண்டாமென அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷுக்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

இலங்கையில் ஏற்பட்டுள்ள மனித உரிமை மீறல்களை தாம் விரைவில் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கவுள்ளதாக அவர் தமது கடிதத்தில் உறுதியளித்துள்ளார். இலங்கையில் மோசமடைந்து வரும் மனித உரிமை மீறல்களால் ஏறத்தாழ மூன்று இலட்சம் மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர்.

எனவே இதனைக் கட்டுப்படுத்த அழுத்தங்கள் கொண்டு வருமாறு அமெரிக்காவிற்கு அதன் செனற் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஏனைய அமைப்புக்களிடமிருந்து அதிக அழுத்தங்கள் ஏற்பட்டு வருவதைத் தொடர்ந்து மகிந்த இந்தக் கடிதத்தை எழுதியுள்ளார்.

மகிந்தவின் கடிதம் வெள்ளை மாளிகைக்கு அமெரிக்காவின் வெளிவிவகாரத்துறை அமைச்சினூடாக அமெரிக்காவிற்கான இலங்கைத் தூதுவர் பேர்னாட் குணதிலக்க மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனை குணதிலக்க உறுதிப்படுத்திய போதும் மேலதிக தகவல்கள் எதனையும் வழங்க மறுத்துவிட்டார். எனினும் தாம் வெள்ளை மாளிகையின் பதிலுக்காகக் காத்திருப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் ஏற்பட்டு வரும் மோசமான மனித உரிமை மீறல்களால் தமது செனற் குழுவில் பிரச்சினைகள் தோன்றியிருப்பதாக கடந்த மாதம் அமெரிக்காவின் வெளிவிவகார உறவுகளுக்கான செனற் குழுவின் உயர் அதிகாரியான றிச்சாட் ஜீ லூகர், ஜனாதிபதி மகிந்தவுக்குக் கடிதம் ஒன்றை எழுதியிருந்தார்.

அதன் பின்னர் கடந்த மார்ச் மாதம் 30 ஆம் திகதி இலங்கையில் மனித உரிமைகள் மோசமடைந்து வருவது மிலேனியம் சலஞ் கணக்கு நிதியை வழங்குவதில் சிக்கல்களை ஏற்படுத்தியிருப்பதாக குடியரசுக் கட்சியைச் சேர்ந்த லூக்கர் தெரிவித்திருந்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, நீதி, பொதுமக்களின் உரிமைகள், அரசியல் உரிமை, சுதந்திரமாகக் குரல் கொடுக்கும் உரிமை, அரசின் செயற்திறன், சட்டத்தை நிலைநாட்டுதல் போன்ற செயற்பாடுகளின் நற்பெறுபேறுகளின் அடிப்படையில்தான் இந்த நிதிவழங்கப்படுவது தெரிந்த விடயம்.

இந்தச் செயற்பாடுகளில் ஏற்படும் பாதிப்புக்கள் மிலேனியம் சலஞ் கணக்கு நிதியம் இலங்கையுடன் செய்து கொள்ளப்பட்ட உடன்பாட்டை மீள் பரிசீலனை செய்யும் நிலைக்கு தள்ளப்படும் எனத் தெரிவித்தார்.

லூக்கரிடமிருந்து கடிதத்தைப் பெற்றுக் கொண்டதாக குணதிலக்க உறுதிப்படுத்தியதுடன், அதற்கு ஜனாதிபதி மகிந்த பதிலளித்ததாகவும் தெரிவித்துள்ளார். இலங்கை தொடர்பான நிலைப்பாட்டை அமெரிக்காவின் நாடாளுமன்றம் மற்றும் காங்கிரஸ் சபை என்பன மீளாய்வு செய்ய வேண்டுமென அமெரிக்காவின் வலிமை மிக்க அரச சார்பற்ற நிறுவனம் ஒன்று ஏப்ரல் 6 ஆம் திகதி வெளியிட்ட தனது அறிக்கையில் தெரிவித்திருந்தது.

அதிகரித்துள்ள மனித உரிமை மீறல்கள் மற்றும் பேச்சுச் சுதந்திரம் மறுக்கப்பட்டுள்ளமை என்பன மிலேனியம் சலஞ் கணக்கு நிதியைப் பெறும் தகைமைகளிலிருந்து இலங்கையை நீக்குவதற்கு போதுமானது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே தனது நிறுவனம் இலங்கையின் நிலைமைகள் தொடர்பாக தொடர்ச்சியாக மீளாய்வு செய்து வருவதாகவும் அங்கு நடைபெறும் மோதல்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தமக்குக் கவலையளிப்பதாகவும் மிலேனியம் சலஞ் நிறுவனம் தெரிவித்துள்ளது. (ந-5)

# கொள்ளைகள், கொலைகளைக் கட்டுப்படுத்துமாறு பாதுகாப்புத் தரப்பினருக்கு வவுனியா நீதிபதி உத்தரவு

வவுனியாவில் தொடரும் ஆயுதக் கொள்ளைகள், கொலைகளைக் கட்டுப்படுத்துவதற்கு உடனடி நடவடிக்கை எடுக்குமாறு வன்னிப் பிராந்திய பிரதிப் பொலிஸ் மா அதிபருக்கும் விசேட அதிரடிப்படையின் வவுனியா மாவட்டத் தளபதிக்கும் வவுனியா மாவட்ட நீதிமன்றம் அறிவித்துள்ளது.

வவுனியா மாவட்ட நீதிபதியின் அலுவலகத்திற்கு அழைக்கப்பட்ட இவர்கள் இருவருக்கும் எழுத்து மூலமாகவும் நேரடியாகவும் இந்த அறிவித்தலை வவுனியா மாவட்ட நீதிபதி எம். இளஞ்செழியன் வழங்கியுள்ளார்.

வவுனியாவில் இரு தினங்களுக்கு முன்னர் பத்து வீடுகளில் கதவுகளை உடைத்துக் கொண்டு உட்புகுந்த ஆயுததாரிகள், வீடுகளில் இருந்தவர்களை அச்சுறுத்தி தங்க நகைகள், ரொக்கப் பணம் உட்பட பெறுமதியான பொருள்களைக் கொள்ளையடித்துக் கொண்டு தப்பிச் சென்றுள்ளனர்.

இதேநேரம் திருநாவற்குளம் பகுதியில் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டு அவருடைய மோட்டார் சைக்கிள் அபகரித்துச் செல்லப்பட்டுள்ளது. வவுனியாப் பிரதேசத்தில் நடக்கும் கொலைகள், ஆயுதக் கொள்ளைகள் என்பன முறையே திருநாவற்குளம், பண்டாரிக்குளம், வேப்பங்குளம், பூமாங்குளம், கணேசபுரம் போன்ற பகுதிகளிலேயே அதிகமாக இடம்பெற்றிருக்கின்றன என்பதனை இந்த உயர் அதிகாரிகளுக்கு நீதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.

கொலைகள், கொள்ளைகளில் ஈடுபட்டவர்கள் யாராக இருந்தாலும் சந்தேக நபர்கள் உடனடியாகக் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தின் முன் சட்டநடவடிக்கைக்காக நிறுத்தப்பட வேண்டும். வரம்பு மீறி தொடர்ந்து கொண்டிருக்கும் கொலைகள், கொள்ளைகளைத் தடுத்து நிறுத்துவதற்கு விசேட அதிரடிப்படை மற்றும் இராணுவத்தினரின் உதவியை நாடி இரவு நேரக் காவல் கடமைகளை அதிகரிக்குமாறும் வவுனியா மாவட்ட நீதிமன்றம் வன்னிப் பிராந்திய பிரதி பொலிஸ் மா அதிபருக்கு இந்த அறிவித்தலில் தெரிவித்துள்ளது.

ஆயுத முனையில் கொள்ளைகளில் ஈடுபடுபவர்களை இனங்கண்டு அவர்களைக் கைது செய்வதுடன் கொள்ளையர்களுக்கு அடைக்கலம் கொடுக்கும் அவர்களின் தாய், தந்தையர் அல்லது உறவினர்களையும் குற்றச்செயல்களில் ஈடுபடுவர்களுக்கு அடைக்கலம் கொடுத்த குற்றத்திற்காக கைது செய்து நீதிமன்றத்தில் நிறுத்துமாறும் இந்த அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வவுனியாப் பிரதேசத்தில் குற்றச்செயல்கள் கட்டுக்கடங்காமல் அதிகரித்துள்ளன. பொலிஸாரின் திறமைக்கும் சட்டத்தின் வலிமைக்கும் நீதிமன்ற நிர்வாகத்திற்கும் சவால்விடும் வகையில் ஆயுதக் கொள்ளையர்கள், கொலைக் குற்றம் புரிபவர்களின் நடவடிக்கைகள் காணப்படுகின்றன.

எனவே குற்றச்செயல்களைக் கட்டுப்படுத்துவதற்கு பொலிஸாரும் விசேட அதிரடிப் படையினரும் உடனடியாகத் தீவிர நடவடிக்கைகளில் இறங்க வேண்டும் என்றும் இந்த நேரடி அறிவித்தலின் மூலம் பொலிஸாருக்கும் அதிரடிப் படையினருக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பொதுமக்கள் பொலிஸாரின் மீதும் நீதிமன்றத்தின் மீதும் வைத்திருந்த நம்பிக்கைக்கு ஊறு விளைவிக்கும் வகையில் தொடரும் குற்றச்செயல்களைக் கட்டுப்படுத்தி சந்தேக நபர்களைக் கைது செய்து சட்ட நடவடிக்கை மேற்கொள்வதன் மூலம் பொதுமக்களின் நம்பிக்கையையும் நன்மதிப்பையும் பெற முடியுமென சுட்டிக்காட்டியுள்ள வவுனியா மாவட்ட நீதிமன்றத்தின் அறிவித்தலில், பொலிஸார், இராணுவத்தினரின் ஒத்துழைப்புடன் பகல், இரவு ரோந்து நடவடிக்கைகளை அதிகரித்து பொதுமக்களின் உயிர் மற்றும் உடைமைகளை பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று உத்தரவிடப்பட்டுள்ளது. (ந-5)

# விசாரணைகளில் அதிருப்தி அக்ஷன் பாம் வெளியேற முடிவு

கடந்த வருடம் ஓகஸ்ட் மாதம் மூதூரில் படுகொலை செய்யப்பட்ட பிரான்ஸ் நாட்டின் அக்ஷன் பாம் தொண்டர் அமைப்பின் பணியாளர்களின் விசாரணைகளின் இறுதிக் கட்டத்தை நடாத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. இந்த விசாரணைகளின் போது அவுஸ்திரேலியாவின் கண்காணிப்பாளர்கள் பிரசன்னமாயிருப்பார்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

எனினும் இந்த விசாரணைகளின் போது ஒன்றுமே வெளிவராது விட்டால் நாம் எமது பணிகளை நிறுத்தி இலங்கையிலிருந்து வெளியேற முடிவெடுத்துள்ளோம் என்றும் அது நிச்சயமானது என்றும் பிரான்ஸ் நாட்டின் தொண்டர் அமைப்பின் தொடர்பான அதிகாரியான லுசில் குறோஜியன் தெரிவித்துள்ளார்.

இரண்டாவது தடவையாக சடலங்கள் தோண்டியெடுக்கப்பட்டு பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்ட பின்னர் தீவிரமான விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது. இலங்கை அரசாங்கத்திற்கும் அவுஸ்திரேலிய அரசாங்கத்திற்கும் இடையில்செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் இலங்கையின் அதிகாரிகள் அவுஸ்திரேலிய நாட்டுக் கண்காணிப்பாளர்கள் முன்னிலையில் பரிசோதனைகளை நடாத்த வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால் விசாரணைகள் அவுஸ்திரேலியக் கண்காணிப்பாளர்கள் இல்லாத நிலையில் நடாத்தப்பட்டுள்ளன. அவுஸ்திரேலிய நாட்டுக் கண்காணிப்பாளர்கள் முன்னர் நடைபெற்ற விசாரணைகளின் போது நாட்டில் இருந்த போதும் அவர்கள் விசாரணைகளில் கலந்து கொள்ள அனுமதிக்கப் படவில்லை.

இலங்கையின் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் நீதிமன்றத்தின் உத்தரவுகளை மதிப்பதில்லை என இந்த அமைப்பு முன்னர் குற்றஞ்சாட்டியிருந்ததும் குறிப்பிடத்தக்கது. இந்த வழக்கு விசாரணை எதிர்வரும் 25 ஆம் திகதி நடைபெறவுள்ளது. (ந-5)

# அமெ.உளவாளியின் தலையை துண்டித்த 12 வயது தலிபான் தீவிரவாதி

(காபூல்)

ஆப்கானிஸ்தானிலும்,பாகிஸ்தானின் வட மேற்கு பகுதியிலும் தலிபான் தீவிரவாதிகள் தங்கள் நடவடிக்கைகளை தீவிரப்படுத்தி வருகிறார்கள். சிறுவர்களையும் கூட தங்கள் இயக்கத்தில் சேர்த்து விடுகிறார்கள்.

கடத்தப்பட்ட அமெரிக்க வீரர்கள் மற்றும் பிணை கைதிகளின் தலையை துண்டித்து கொலை செய்வதற்கும் இந்த சிறுவர்களை பயன்படுத்துகிறார்கள்.

பாகிஸ்தானின் தென் மேற்கு குலாம் நபி என்பவரை தலிபான் தீவிரவாதிகள் கடத்திச் சென்றனர். அமெரிக்காவுக்கான உளவு பார்த்ததாக குலாம் நபி மீது தலிபான் தீவிரவாதிகள் குற்றம் சாட்டினார்கள்.

குலாம் நபிக்கு தீவிரவாதிகள் மரண தண்டனை விதித்தனர். அவரது தலையை 12 வயது சிறுவன் கத்தியால் அறுத்து துண்டாக்கினான். குழந்தை தோற்றம் மாறாத அந்த சிறுவன் உளவாளியின் கழுத்தை கத்தியால் அறுப்பதை வீடியோவிலும் தீவிரவாதிகள் வெளியிட்டுள்ளனர். (ந-5)

# 2-ம் தவணை இன்று ஆரம்பம்

நாட்டின் சகல பாடசாலைகளின் 2-ம் தவணை கல்வி நடவடிக்கைகள் இன்று ஆரம்பமாகின்றன. 2-ம் தவணை கல்வி நடவடிக்கைகள் யாவும் ஓகஸ்ட் மாதம் 3 ஆம் திகதியுடன் நிறைவடையும்.

தமிழ்,சிங்கள பாடசாலைகளில் மூன்றாம் தவணை கல்வி நடவடிக்கைகள் செப்ரெம்பர் மாதம் 4 ஆம் திகதி தொடக்கம் டிசம்பர் மாதம் 7 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

சகல பாடசாலைகளும் ஆண்டு தோறும் 210 நாட்கள் நடைபெறவேண்டுமென ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட போதிலும் இவ் ஆண்டு இடம் பெறும் அரசாங்க விடுமுறைகளை கருத்தில் கொண்டு 201 நாட்கள் பாடசாலை நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. (ந-3,102)

# மீனவர் ஒருவர் கரை திரும்பவில்லை

(வடமராட்சி)

வடமராட்சி கிழக்கு கடற்பரப்பில் தொழிலில் ஈடுபட்டு வந்த படகு மீது நடத்திய தாக்குதலில் இரு கடற்தொழிலாளர்களில் ஒருவர் நேற்று வரை கரை திரும்பவில்லையென அறிவிக்கப்பட்டுள்ளது.

சுண்டிக்குளம் கடற்கரையிலிருந்து நேற்று முன்தினம் மாலை ஏழு மணியளவில் தொழிலுக்காகச் சென்ற படகு உரிமையாளரான இராசரத்தினம் வசந்தன் (வயது 31) இவரது உதவியாளரான தங்கராசா சதீஸ் (வயது 25) ஆகியோர் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. காணாமல் போனவர் தங்கராசா சதீஸ்என்றுதெரிவிக்கப்படுகின்றது.(ந-5,43)

# 2500 கோடி ரூபா நாணயத் தாள்கள் கடந்த ஆண்டில் வெளியிடப்பட்டன

(கொழும்பு)

2006 ஆம் ஆண்டில் புதிதாக 2 ஆயிரத்து 500 கோடி ரூபா பெறுமதியான நாணயத்தாள்களும் நாணயக் குற்றிகளும் வெளியிடப்பட்டதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

மத்திய வங்கியினால் கடந்த வாரம் வெளியிடப்பட்டுள்ள அறிக்கை ஒன்றிலேயே இது தெரிவிக்கப்பட்டுள்ளது.

2005 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் மதிப்பிடப்பட்ட நாணயத் தாளினதும் நாணயக் குற்றிகளினதும் பெறுமதி 132 பில்லியனாகும். 2006 ஆம் ஆண்டின் இறுதியில் இது 157பில்லியனாக அதாவது 19 வீதம் அதிகரித்து காணப்பட்டது.

2006 ஆம் ஆண்டில் வர்த்தக வங்கிகளுக்கு விநியோகிக்கப்பட்ட நாணயக் குற்றிகளின் தொகை 187 மில்லியனாகும். 2005 ஆம் ஆண்டில் 115 மில்லியன் நாணயக் குற்றிகள் விநியோகிக்கப்பட்டிருந்தன என்றும் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-5)

## ஜனாதிபதி...

விஜயத்தின்போது புனித பாப்பரசர் 16 ஆவது ஆசீர்வாதப்பரை சந்தித்து இலங்கையின் இனப்பிரச்சினை தொடர்பில் ஜனாதிபதி கலந்துரையாடியமை குறிப்பிடத்தக்கது.

இது தவிர கல்வி,கலாசாரம்,விஞ்ஞானம் மற்றும் தொழில் நுட்பத்துறைகளை மேம்படுத்துவது குறித்து இரு நாடுகளும் இணக்கம் கண்டுள்ளதாகவும் ஜனாதிபதி செயலக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-3)

## இறுதிச் சுற்றில்...

மேற்கொள்வார்.

இதனிடையே இலங்கையின் விளையாட்டுத்துறை அமைச்சர் காமினி லொக்குகே ஏற்கனவே மேற்கிந்திய தீவுகளுக்கு சென்றுள்ளதாகவும் இலங்கை அணி இறுதியாட்டத்திற்கு தெரிவானால் அவர் அங்கு தங்கியிருப்பார் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.(ந-5)

## சிறி.சு.கட்சியின் யோசனை...

பொலநறுவையில் நேற்று இடம் பெற்ற வைபவமொன்றில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். தமது கட்சியின் யோசனைகளில் நாடாளுமன்றத்திற்கு பதில் கூறக்கூடிய நிறைவேற்று அதிகாரம் கொண்ட பிரதமர் முறைமை குறித்த யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

சூழ்ச்சிகள் மூலம் நாடாளுமன்ற அதிகாரத்தை கைப்பற்றினாலும் பிரதமரை அகற்ற முடியாத வகையில் அந்த முறை உருவாக்கப்படும். பொதுத் தேர்தலில் தமது பிரதேசத்துக்கான பாராளுமன்ற உறுப்பினர்களை தெரிவு செய்ய வாக்களிக்கும் போது, பிரதமருக்கு விருப்பு வாக்கை அளிக்கும் வகையிலான திருத்தங்களும் தமது யோசனைகளில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மைத்திரிபால சிறிசேன கூறியுள்ளார்.

ஜனநாயகத்தை வலுப்படுத்துவதற்கான ஜனாதிபதி தலைமையிலான சிறிலங்கா சுதந்திரக்கட்சி எப்போதும் அர்ப்பணிப்புடன் செயற்படுமென குறிப்பிட்ட அவர் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கா உள்ளிட்ட ஐக்கிய தேசியக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சில்லரை அரசாங்கம் கைது செய்யத் தயாராகவுள்ளது எனக்கூறும் குற்றச்சாட்டை மறுத்தார்.

இது ஐக்கிய தேசியக்கட்சியின் பகல் கனவு எனவும் மக்களின் கவனத்தைத் திசை திருப்புவதற்கு மேற்கொள்ளும் பிரசாரம் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ந-3)

## காணாமல் போனோர் பற்றி...

விபரங்களும் அனுப்பப்பட்டிருந்தன. இவர்களில் சிவகாந்தன் குஞ்சுப்பிள்ளை, நிசாந்த சந்திரசிறி இடம்கொட ஆராய்சிகே உதய பிரியதர்ஷன கத்துலுவ ஹேவவே, உதயராஜ் செல்வரட்ணம், பிரேமினி தனுஷ்கோடி,கேதீஸ்வரன் சுயம்புநாடார், கணபதி நாடார் சுயம்புநாடார், செபலை முத்து மெக்ஸிபோல்டன், முத்தையா திருச்செல்வம் ஆகிய ஒன்பது பேர் தொடர்பாக தாம் முதலில் கவனம் எடுத்திருப்பதற்காக ஐக்கிய நாடுகள் சபை அறிவித்துள்ளது.

மனித உரிமைகளுக்கான உயர் ஸ்தானிகராலயம் இந்த ஒன்பது பேருக்கும் தனித்தனி விசாரணை இலக்கங்களையும் வழங்கியுள்ளது. கடத்தப்பட்ட இடம் உள்ளிட்ட சகல விபரங்களுடனும் தனித்தனியான விசாரணைகளை அச்சபை கடிதம் மூலம் கோரியுள்ளது. கடத்தப்பட்டு காணாமற்போனோர் தொடர்பில் அவர்களது உரிமைகள் மீறப்படாத வகையில் விசாரணைகளை மேற்கொண்டு அவர்கள் எங்கு இருக்கிறார்கள் என்பது கண்டறியப்படவேண்டும்.

இது தொடர்பாக உரிய விசாரணைகள் நடத்தப்பட்டு மூன்று மாத காலப்பகுதிக்குள் அறிக்கை சமர்ப்பிக்குமாறு அரசாங்கத்திடம் கோரியுள்ளோம். எமது கோரிக்கை தொடர்பில் அரசாங்கம் எடுக்கும் நடவடிக்கை குறித்தும் இந்த கடிதத்துக்கான அரசின் நிலைப்பாடு பற்றியும் உடனுக்குடன் அறியத்தர நடவடிக்கை எடுத்துள்ளோம் எனக் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை கடத்தப்பட்டு காணமற்போனோர் தொடர்பான ஐக்கிய நாடுகள் சபையின் செயற்பாட்டுக்குழுவின் 82 ஆவது அமர்வு எதிர்வரும் யூன் மாதம் 25 ஆம் திகதி முதல் 29 ஆம் திகதி வரை ஜெனீவாவில் நடைபெறவுள்ளது.

இந்த அமர்வில் இலங்கையில் இடம் பெறும் ஆட்கடத்தல்கள் தொடர்பான எழுத்து மூலமான அறிக்கையை சமர்பிக்க விரும்பினால் எதிர்வரும் மே மாதம் 14 ஆம் திகதிக்கு முன்னர் தமக்கு அறியத்தருமாறு அச் சபை காணாமற் போனோரை தேடியறியும் குழுவிடம் கேட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் இக் கோரிக்கை மூலம் கடத்தப்பட்டு காணாமற்போனோரை கண்டு பிடிக்கும் முயற்சியில் பாரிய ஒரு திருப்பம் ஏற்பட்டுள்ளதாகவும் மனித உரிமை மீறல்களை கட்டுப்படுத்துவதற்காக சர்வதேச மனித உரிமை நிறுவனங்களுடன் மேலும் பல செயற்திட்டங்களை முன்னெடுக்கவுள்ளதாகவும் காணாமல் போனோரை தேடியறியும் குழுவின் இயக்குநர் ஜே.தயானன் தெரிவித்தார். (ந-5)

## ஐ.நா.உதவி அமைப்பை வெளியேறுமாறு...

ளுக்காக இங்கு அது தொடர்ந்து தங்கி சேவைகளை ஆற்றி வருகின்றது.

ஐக்கிய நாடுகள் சபையின் மனிதாபிமான உதவி அமைப்புக்களின் இணைப்பு அமைப்பானது மனித உரிமை கண்காணிப்புப் பணியை மேற்கொள்ள விரும்புவதாக அரசாங்கம் கோபமடைந்துள்ளது. வேறு பல அமைப்புக்கள் மனித உரிமை கண்காணிப்புப் பணிகளை மேற்கொள்வது ஏற்றுக்கொள்ள முடியாது என அரசாங்கம் ஐக்கிய நாடுகள் சபைக்கு தெரிவித்துள்ளது.

ஆழிப்பேரலை நிவாரண உதவிகளுக்காக இலங்கைக்கு தமது அமைப்பு வந்திருந்தது எனவும் எனினும் அது மோதல்களில் பாதிக்கப்பட்ட மக்களுக்கும் உதவிப்பணிகளை ஆற்றி வந்திருக்கின்றது எனவும் ஐக்கிய நாடுகள் சபையின் மனிதாபிமான உதவி அமைப்புக்களின் இணைப்பு அமைப்பின் பேச்சாளர் ரீபென் பங்கர் நியூயோர்க்கில் தெரிவித்துள்ளார்.

தமது அமைப்பு மனித உரிமைகள் கண்காணிப்புப் பணியை மேற்கொள்ளவில்லை என அவர் மேலும் தெரிவித்தார். இந்த அமைப்பின் தலைவர் வலன்ரின் ஹற்சின்ஸகி தற்போது கிளிநொச்சியில் தங்கியுள்ளதுடன் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட வேண்டிய திட்டங்கள் தொடர்பாக விடுதலைப்புலிகளுடன் கலந்துரையாடல்களை நடத்தி வருவதும் குறிப்பிடத்தக்கது. (ந-5)

## எதிர்வரும் தினங்களில்...

அதேவேளை கிழக்கில் மீதமுள்ள விடுதலைப்புலிகளின் முகாம்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இவ் வருடத்தில் பயங்கர வாதத்தை ஒழிப்பது மட்டுமன்றி பாரிய அபிவிருத்தியை இலக்காகக்கொண்ட செயற்திட்டங்களும் வகுக்கப்படும் எனக் கூறிய பிரதமர் பணத்திற்கு மயங்கி விடுதலைப்புலிகளிடம் நாட்டைகாட்டிக் கொடுக்கும் சிங்களவர்களின் செயல் தேசத்துரோகம் என்றும் பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க கூறியுள்ளார் (ந-3)

## கடற்புலிகளின் அச்சுறுத்தல்...

செயற்படவுள்ளதாகவும் தெரிவித் திருக்கிறார்.

புதுடில்லி ஊடகவியலாளர் மாநாட்டில் ஜி முல்லான் மேலும் தெரிவிக்கையில் பயங்கரவாதத்திற்கும் அல்கொய்டாவுக்கும் எதிரான உலகளாவிய போர் கடந்த தசாப்தகாலமாக இடம் பெற்று வருகின்றது. இந்தியத் துறைமுகங்களில் அமெரிக்கக் கப்பல்களை நிறுத்துவதற்கும் பிராந்தியத்தில் கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குமான முயற்சிகளில் ஈடுபட்டுள்ளோம்.அதற்கான அனுமதி கிடைத்துள்ளது.

அமெரிக்காவின் ‘ஆயிரம் கடற்படைக் கப்பல்’ திட்டத்திற்கு ஆதரவு கிடைத்துள்ளது. எனினும் இதுவரை இதற்கான பதில் இந்தியாவிடம் இருந்து கிடைக்கவில்லை. இந்திய கடற்படை அதிகாரி சுரேஷ் மேத்தாவுடன் இந்த எண்ணக்கரு குறித்து ஆராய்ந்துள் ளேன்.

ஆயிரம் கடற்படைக்கப்பல் திட்டத்தை மூன்று வருடங்களுக்கு முன்னர் அமெரிக்கா முன்வைத்திருந்தது. எனினும் இந்தியா இது வரை இந்த எண்ணக்கருவிற்கான தனது பதிலை வழங்கவில்லை.

ஆயிரம் கடற்படைக்கப்பல் திட்டத்தில் இந்தியாவின் எத்தனை கப்பல்கள் ஈடுபடும் என்பதை இந்தியாவே தீர்மானிக்க வேண்டும். பெயரளவுக்கு மட்டுமே ஆயிரம் கப்பல் என்று குறிப்பிட்டுள்ளோம். ஆனால் இந்தத் திட்டத்தில் பத்து ஆயிரம் கப்பல்கள் வரை இருக்கலாம்.

இந்தத்திட்டம் அமெரிக்காவுடன் மட்டும் சம்பந்தப்பட்ட விடயமல்ல, மிகப்பெரியளவிலானதும் பிராந்திய ரீதியிலானதுமான உலகளாவிய வேலைத்திட்டம் இதுவாகும்.

இந்து சமுத்திர பிராந்தியத்தில் சுனாமி அனர்த்தத்தின் போதும் இஸ்ரேல்-ஹிஸ்புல்லா சண்டையின் போதும் வெளிநாட்டவர்களை வெளியேற்றுவதற்கும் இந்தத் திட்டம் செயற்படுத்தப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்திற்கு பல்வேறு நாடுகளில் இருந்து கிடைக்கும் பெருமளவான கப்பல்களின் உதவியால் வேலைகளை இலகுவாக செய்து கொள்ள முடியும் என்றார். கடந்த 17 ஆம் திகதி இந்தியாவுக்கு விஜயம் செய்த மைக்கல் ஜி முல்லான் 18 ஆம் திகதி இந்திய பாதுகாப்பு அமைச்சர் ஏ.கே.அந்தோனியையும் பாதுகாப்பு அதிகாரிகளையும் சந்தித்து அமெரிக்காவின் ஆயிரம் கடற்படைக் கப்பல் திட்டம் குறித்தும் பிராந்தியத்தின் பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்தும் ஆராய்ந்திருக்கின்றார்.

கடற்படை உறவை பலப்படுத்தும் நோக்கிலும் கூட்டுப் பயிற்சி நடவடிக்கைகள் குறித்து திட்டமிடுவதற்கும் அமெரிக்கக் கடற்படை அதிகாரி அட்மிரல் மைக்கல் ஜி முல்லான் இந்தியாவுக்கு வருகை தந்ததாக இந்தியாவின் பாதுகாப்பு அமைச்சக இணையத்தள செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-5)

## கடன் அட்டை விவகாரம்...

செய்திகள் தொடர்பில் அவதானமாக செயற் படவேண்டும் என்று பி.பி.சி.போன்ற பொறுப்பான ஊடகங்களை நாம் கேட்டுக் கொள்கின்றோம்.

எமது தமிழர் தாயகத்தில் உயரிய நெறிக ளோடு குற்றமற்ற சூழலை நாம் ஏற்படுத்தியிருக்கின்றோம் என்பதை இராஜதந் திர சமூகத்தினர் நன்கு அறிவர்.

புலம்பெயர் வாழ் தமிழ் மக்கள் தாங்கள் வாழும் நாடுகளின் சட்டங்களைச் செயற் படுத்த ஒத்துழைக்க வேண்டும் என்றும் நாம் கேட்டுக்கொள்கின்றோம் என்றார் தமிழ்ச் செல்வன். பி.பி.சியில் கடந்த சனிக்கிழமை பிரித்தானியாவில் கடன் அட்டை மோசடி உள்ளிட்டவர்களின் பின்னணியில் விடுதலை புலிகள் இருப்பதாக பிரித்தானியாவுக்கான இலங்கை தூதரக அதிகாரி மேக்ஸ்வெல் பொய்யாக குற்றம் சாட்டியதனைத் தொடர்ந்து சு.ப.தமிழ்ச்செல்வன் இந்த விளக்கம் அளித்துள்ளார். (ந-5)


## கண்ணீர் அஞ்சலி

வலம்புரி நிறுவனத்தில் ஆரம்ப காலத்தில் பணியாற்றிய

**தோமஸ் பீற்றர் பொன்கலன் (கில்லறி)**

அவர்களின் மறைவுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து அவரின் ஆத்மா நித்திய பேரின்பம் பெற இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

*வலம்புரிக் குடும்பம்.*

## மரண அறிவித்தல்

**இராமலிங்கம் இராசசுந்தரம்**

(ஓய்வுபெற்ற கூட்டுறவுப் பரிசோதகர்,முன்னாள் பொது முகாமையாளர், பண்டத்தரிப்பு ப.நோ.கூ.சங்கம்)

மாதகலைப் பிறப்பிடமாகவும் கொக்குவிலில் வசித்து வந்தவருமான இ.இராசசுந்தரம் அவர்கள் 22.04.2007 ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறியத்தரப்படும்.

தகவல்

34,குளப்பிட்டி லேன்,<br>கொக்குவில் கிழக்கு.

இ.முரளீதரன் (மகன்)<br>26-ம் அணி மருத்துவ பீடம் யாழ்.

(C-023)


இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ.ஸ்தாபனத்தாரால் இல.03, இரண்டாம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 23.04.2007 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.